அசல் வழக்கு எண்.30/18

நாள் - 26.02.2019

பிடயுள்யு- 1 பெயர் - மகேஸ்குமார்

<u>குறுக்குவிசாரணை</u>

நான் ராம்குமார் த/பெ. குணசேகரன் என்பவரை பார்த்ததே இல்லை. ஆதியில் தாவா சொத்து எங்கள் குடும்பத்திற்கு தான் பாத்தியம். என் தாத்தாவின் அப்பா காலத்தில் இருந்து எங்கள் குடும்பத்தில் தான் உள்ளது. ஆதியில் இந்த கந்தசாமி என்பவருக்கு சொந்தமானது என்பது சரிதான். கந்தசாமியின் வாரிசுகள் யார் யார் என்றால், பெரியசாமி மற்றும் முருகேசன் ஆகியோர். கந்தசாமி காலத்திலேயே அவருக்கும், அவரது வாரிசுகளுக்கும் சில சொத்துகளை பொருத்து மட்டும் பாகம் பிரித்து கொள்ளப்பட்டது. அவ்வாறு பிரித்து கொள்ளப்பட்ட சொத்துக்கள் எவை என்றால், இந்த வழக்கில் சம்மந்தப்படாத நஞ்சை நிலங்கள் ஆகும். நான் தாவா சொத்தை பார்த்திருக்கிறேன்.அடையாளம் தெரியும். கந்தசாமி காலத்தில் நஞ்சை நிலங்கள் பெரிசாமி, முருகேசன் ஆகியோருக்குள்தான் பிரித்துக்கொள்ளப்பட்டன. பெரியசாமி, முருகேசன் ஆகியோருக்குள் நஞ்சை நிலங்கள் பிரித்துக்கொள்ளப்பட்டதாக நான் சொல்லும் காலத்தில் கந்தசாமி இருந்ததாக ஞாபகம் இல்லை. பெரியசாமி , முருகேசன் ஆகியோருக்குள் பாகம் பிரிந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என ஞாபகம் இல்லை. என் அப்பா பஞ்சாயத்து அலுவலகத்தில் வேலை பார்த்து ரிட்டையர் ஆகி வயதான காரணத்தினால் வீட்டோடு இருக்கிறார். தனியாக எங்கேயும் செல்ல முடியாது. முருகேசன் 1970 ஆம் வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார். முருகேசனின் வாரிசுகள் சந்திரமோகன், சேட்டு, ஆனந்தி, சண்முகம் ஆகியோர். முருகேசன் வாரிசுகளுக்கு பாகம் ஏற்பட்டு விட்டதா என்பது எனக்கு தெரியாது.